III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

O.S.473/2019

Deposition of witness for the Defendant/DW1
Respondent solemnly by Thiru.P.Kothandaraman, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 19-08-2024

| | | | |
|---|---|---|---|
| Name | : Jambu | Village | : |
| Father's Name | : Seeyalan | Calling | : |
| Age | : | Taluk | : |

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

பி.த,சா.5 மின் இணைப்பு வணிக பயன்பாட்டுக்கானது. பி.த.சா.5 ல் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வணிக பயன்பாட்டிற்கும் குடியிருப்பு பயன்பாட்டிற்கும் தனித்தனி அட்டைகள் மின்சார வாரியத்தால் வழங்கப்படுகிறது என்பது எனக்கு தெரியும். வீட்டு உபயோகத்திற்கு வெள்ளை நிற அட்டையும் வணி பயன்பாட்டிற்கு வேறு நிற அட்டையும் வழங்கப்படும் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. ஆதலால் பி.த,சா.5 வெள்ளை நிறத்தில் இருப்பதால் அது வீட்டு உபயோகத்திற்கு உரியது என்றால் சரியல்ல. அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள 163/26 என்பது புல எண் என்றால் சரிதான். அது கதவு இலக்க எண் அல்ல என்றால் சரியதான். பி.த,சா.5 க்கு உரிய இடத்தின் கதவு இலக்க எண் எனக்கு ஞாபகமில்லை. ஷெட் அமைந்திருக்கும் இடம் சுண்ணாம்பு கலவாய் தெரு என்றால் சரிதான். ஷெட் போடப்பட்டிருக்கும் இடம் எதற்காக உபயோகப்படுத்தப்படுகிறது என்றால் ஆட்டோ மொபைல் சர்வீஸ் செய்வதற்கும் மற்றும் பார்க்கிங் செய்வதற்கும் உபயோகப்படுத்தப்படுகிறது. ஆட்டோ மற்றும் கார், வேன் ஆகியவை அங்கு சர்வீஸ் செய்யப்படுகிறது. அது வியாபார நோக்கத்திற்கானது என்றால் சரிதான். அந்த இடத்தில் பெயர் பலகை உள்ளது. அதில் கே.ஆர்.,டி ஆட்டோ ஒர்க்ஸ் கார் ரெண்டல், கதவு எண்.7 பி சுண்ணாம்பு கலவாய் தெரு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு ஞாபகமில்லை. அந்த இடத்திற்கு மாதம் ரூ.10,000 வாடகை வாங்கி வருகிறேன். அதை நடத்தி வருபவரின் பெயர் தனஜெயன். அந்த பெயர் பலகைக்கு நேர் எதிராக ஓர் அடுக்கு மாடி கட்டிடம் உள்ளது என்றால் நான் கவனிக்கவில்லை. அந்த கட்டிடத்திலும் கே.ஆர்.டி ஆட்டோ ஒர்க்ஸ் என்ற பெயர் பலகை பொறுத்தப்பட்டுள்ளது என்றால்

எனக்கு தெரியாது, நான் பார்க்கவில்லை. சர்வே எண்.163/26ன் விஸ்தீரணம் 7.5 சென்ட். அந்த பகுதியை சுற்றி காம்பௌண்ட் சுவர் உள்ளது. காம்பௌண்ட் சுவருக்கு உள்ளிருக்கும் இடத்திற்கான விஸ்தீரணம் 14.5 சென்ட். அந்த 14.5 சென்ட் தான் வழக்கிடை சொத்து. தாவா சொத்தை தாசில்தார் பார்வையிட்டு சர்வே நம்பரை கண்டுபிடித்து அதில் ஷெட்டும் மின் இணைப்பும் மேற்கூறிய பெயர் பலகையும் உள்ளது என்று சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். தாவா சொத்து ஆற்காடு சாலையில் மெட்ரோ ரயில் வழித்தடம் உள்ள இடத்திலிருந்து பார்க்கும் துாரத்தில் உள்ளது என்றால் சரிதான். அந்த இடத்தினுடைய தற்போதைய சந்தை மதிப்பு எனக்கு தெரியாது. அந்த இடத்திற்கான சட்டத்திற்கு உட்பட்ட ஞாயமான வாடகை எவ்வளவு என்று எனக்கு தெரியாது. பி.த.சா.5 அட்டைக்கான மின் மீட்டர் சர்வே எண்.163/26ல் இல்லை என்றால் சரியல்ல. மின் மீட்டர் சர்வே எண்.163/26–ல் இல்லை என்றும் வாதி இடத்தில் உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. அந்த மின் மீட்டரும் ஷெட்டும் இருக்கும் இடத்தின் புல எண்.163/5சி 2 என்றால் சரியல்ல. அதன் கதவு எண்.7பி சுண்ணாம்பு கலவாய் தெரு என்றால் சரியல்ல. வா.மத,சா.7ல் தாசில்தார் நாங்கள் ஷெட் மற்றும் மின் மீட்டர் வைத்துள்ள இடம் சர்வே எண்.163/5சி 2ல் உள்ளது என்று சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. அந்த வா.த,சா.7ஐ கொடுத்த தாசில்தார் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற வழக்கிலும் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. அந்த மின் இணைப்பு தற்போது பெருநகர சென்னை மாநகராட்சியில் சேர்ந்துவிட்டது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. தாவா சொத்து எந்த பஞ்சாயத்தில் வருகிறது என்பது எனக்கு ஞாபகமில்லை. பி.த,சா.3ல் தாவா சொத்து போரூர் கிராமத்தில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஷெட்கிற்கு வரி செலுத்தியுள்ளோமா என்றால் வரி செலுத்த சென்ற போது வழக்கு நிலுவையில் இருப்பதாக சொல்லியதால் வரி செலுத்தமுடியாமல் போனது. 2017ல் ஷெட்டை கட்டினேன். 2017லிருந்து ஷெட்டிற்கு வரி செலுத்துவதற்கு வேறு வழிமுறையை தேர்ந்தெடுத்தேனா என்றால் இல்லை. வழக்கு நிலுவையில் இருப்பதால் வரி செலுத்த முடியவில்லை. ஷெட் போடுவதற்கு சி.எம்.டி.எ வில் அனுமதி வாங்கப்பட்டதா என்றால் இல்லை. ஷெட் போட்ட பின்னர் தான் மின் இணைப்பு பெற்றோம்.